16037

AL/2026/23/T-I

සියලු ම හිමිකම් ඇවිරිණි /முழுப் பதிப்புரிமையுடையது/All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

சுட்டெண் : ..................................

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **A, B** ஆகிய **இரண்டு** பகுதிகளைக் கொண்டுள்ளது.
※ பகுதி **A** பல்தேர்வு வினாக்கள் **30** இனையும் பகுதி **B** குறு வினாக்கள் **20** இனையும் கொண்டுள்ளன.
※ **சகல** வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
※ ஒவ்வொரு வினாவுக்கும் **இரண்டு** புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்

| பக்க இல. | வினா இல. | புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 1 - 3 | |
| 2 | 4 - 11 | |
| 3 | 12 - 18 | |
| 4 | 19 - 25 | |
| 5 | 26 - 30 | |
| 6 | 31 - 37 | |
| 7 | 38 - 45 | |
| 8 | 46 - 50 | |
| மொத்தம் | | |

| | கையொப்பம் | குறியீட்டெண் |
|---|---|---|
| 1 ஆம் பரீட்சகர் | | |
| 2 ஆம் பரீட்சகர் | | |
| மேலதிக பிரதம பரீட்சகர் | | |
| எண்கணிதப் பரிசோதகர் | | |
| பிரதம பரீட்சகர் | | |

## பகுதி A

● **1** தொடக்கம் **20** வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்குமான **சரியான** அல்லது **மிகவும் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்து, அதன் **இலக்கத்தை** அடைப்புக்குறிக்குள் உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

**1.** பின்வருவனவற்றுள் அரசியலின் இன்றியமையாத பண்பாக கருதப்படுவது எது?
(1) அதிகாரம் (2) சமாதான சகவாழ்வு (3) ஒழுக்கம்
(4) வன்முறை (5) பங்குபற்றுதல் (......)

**2.** பின்வரும் கூற்றுக்களுள் அரசியல் விஞ்ஞானம் குறித்த மரபுசார் கருத்தினை மிகச் சரியாக பிரதிபலிப்பது எது?
(1) அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய கற்கையாகும்.
(2) மனித உரிமைகள் குறித்த கற்கையாகும்.
(3) பொதுக் கொள்கை பற்றிய கற்கையாகும்.
(4) அரசியல் நடத்தை பற்றிய கற்கையாகும்.
(5) சர்வதேச உறவுகள் குறித்த கற்கையாகும். (......)

**3.** பின்வரும் அரசியல் விஞ்ஞான அணுகுமுறைகளுள் எது ஏனைய கற்கைத் துறைகளின் கோட்பாடுகள், எண்ணக்கருக்கள் மற்றும் முறையியல்களை பயன்படுத்துகிறது?
(1) மெய்யியல் அணுகுமுறை
(2) பல்துறைசார் அணுகுமுறை (பன்மைத்துவ அணுகுமுறை)
(3) ஒப்பீட்டு அணுகுமுறை
(4) அரசியல் பொருளாதார அணுகுமுறை
(5) பெண்ணியல்வாத அணுகுமுறை (......)

[பக். 2 ஐப் பார்க்க

Past Papers Wiki



4. பின்வருவனவற்றுள் அரசின் இன்றியமையாத கூறுகளுள் ஒன்றாக கருதப்படுவது எது?
(1) சமூக நிறுவனங்கள் (2) இயற்கை வளங்கள் (3) அரசாங்கம்
(4) தொழில்நுட்பம் (5) பலமிக்க இராணுவம் (……)

5. பின்வரும் கூற்றுகளுள் அரசினை மிகச்சரியாக விபரிக்கும் கூற்று எது?
(1) அரசு இறைமை அதிகாரம் இன்றியும் நிலைத்திருக்க முடியும் என்பதாகும்.
(2) அரசு சமூக நிறுவனங்களுக்கு கீழ்ப்பட்டது என்பதாகும்.
(3) அரசு ஓர் அரசியல் ஸ்தாபனம் என்பதாகும்.
(4) அரசு முறையான அரசாங்க நிறுவனங்கள் இன்றியும் செயற்படமுடியும் என்பதாகும்.
(5) அரசு சமய மற்றும் கலாசார நிறுவனங்களை உள்ளடக்கியது என்பதாகும். (……)

6. பின்வருவனவற்றுள் 'தேசம் அரசின் அடிப்படையாக இருக்க வேண்டும்' என்பதை வலியுறுத்தும் அரசியல் கருத்தியல் யாது?
(1) தாராளவாதம் (2) தேசியவாதம் (3) சோஷலிசம்
(4) மதசார்பின்மைவாதம் (5) குடியரசுவாதம் (……)

7. பின்வரும் கூற்றுக்களுள் எது அரசாங்கத்தை மிகச் சரியாக விபரிக்கின்றது?
(1) அது அரசின் அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் ஓர் இயந்திரம் என்பதாகும்.
(2) அது அரசியல் ரீதியாக ஒட்டுமொத்த சமூகத்தையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஓர் ஸ்தாபனம் என்பதாகும்.
(3) அது ஒரு நிரந்தர நிறுவனம் என்பதாகும்.
(4) அது மற்றைய அனைத்து ஸ்தாபனங்களை விடவும் மேலானது என்பதாகும்.
(5) அது தனியார் நிறுவனங்களின் கூட்டுமொத்தமாக உள்ளது என்பதாகும். (……)

8. தாராளவாதம் பிரதானமாக வலியுறுத்துவது
(1) அரசின் கட்டுப்பாட்டில் ஊடகம் இருக்க வேண்டும் என்பதனையாகும்.
(2) அரசு அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்துவதனையாகும்.
(3) தனிமுதன்மை முடியாட்சி மற்றும் குடும்ப ஆட்சியினையாகும்.
(4) தனிமனித சுதந்திரம் மற்றும் உரிமைகளை பாதுகாப்பதையாகும்.
(5) ஆட்சி அதிகாரங்கள் நிறைவேற்றுத்துறையிடம் குவிந்திருப்பதனையாகும். (……)

9. பின்வரும் கூற்றுக்களுள் கலப்பு (அர்த்த) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையை நன்கு விவரிப்பது எது?
(1) நிறைவேற்று அதிகாரம் முழுமையாக ஜனாதிபதியின் கரங்களில் குவிந்து காணப்படுதல்.
(2) ஜனாதிபதியை நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றின் மூலம் பதவியிலிருந்து நீக்க முடியுமாக இருத்தல்.
(3) நிறைவேற்றுத்துறை முழுமையாக சட்டத்துறையிலிருந்து விடுபட்டு செயற்படல்.
(4) ஜனாதிபதித்துவ மற்றும் பாராளுமன்றம் ஆகிய இரு அரசாங்க முறைகளினதும் பண்புகள் சிலவற்றை ஒன்றிணைத்ததாக காணப்படுதல்.
(5) பிரதமர் அரசின் தலைவராக இருத்தல். (……)

10. பின்வரும் கூற்றுக்களுள் எது வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தின் முக்கிய பண்பாகக் கொள்ளப்படுகிறது?
(1) அரசாங்கத்தின் அதிகாரங்கள் மீது அரசியலமைப்புசார் கட்டுப்பாடுகள் காணப்படுதலாகும்.
(2) சட்டவாட்சி காணப்படாமை.
(3) அனைத்து அரசாங்க அதிகாரங்களும் தனியொரு ஆட்சியாளனிடம் குவிந்து காணப்படுதல்.
(4) அரசாங்க அதிகாரத்தின் மீது தடைகள் மற்றும் சமன்பாடுகள் காணப்படாமை.
(5) குடிமக்களின் உரிமைகளுக்கு சட்டரீதியாக உத்தரவாதமளிக்கப்பட்ட பாதுகாப்பு காணப்படாமை. (……)

11. கீழ்வரும் எண்ணக்கருக்களுக்கான விளக்கங்களுள் ஒன்று மட்டுமே சரியானது. சரியான விளக்கத்துடன் கூடிய எண்ணக்கருவினைத் தெரிவு செய்க.
(1) தேசிய அரசு - பொதுவானதொரு தேசிய அடையாளத்தினை பகிர்ந்து கொள்ளும் பிரஜைகளைக் கொண்ட இறைமைமிக்க ஓர் அரசியல் சங்கமாகும்.
(2) தாராள ஜனநாயகம் - அரசியல் பங்கேற்பை அதைரியப்படுத்தும் நேரடி ஜனநாயகத்தின் ஒரு வடிவமாகும்.
(3) எழுதப்பட்ட அரசியலமைப்பு - ஒற்றையாட்சி அரசின் ஓர் இன்றியமையாப் பண்பாகும்.
(4) கூட்டுச் சமஷ்டி - அனைத்து அதிகாரங்களும் மத்திய அரசிடம் குவிந்து காணப்படும் ஒரு முறைமையாகும்.
(5) மனித உரிமைகள் - அரசினால் பிரஜைகளுக்கு வழங்கப்படும் உரிமைகளாகும். (……)

[பக். 3 ஐப் பார்க்க

12. கீழே தரப்பட்டுள்ள நாடுகளின் அரசியலமைப்பு முறைமை குறித்த பின்வரும் கூற்றுக்களுள் ஒன்று மட்டுமே சரியானது. சரியான கூற்றை தெரிவு செய்க.
   (1) பிரித்தானிய பாராளுமன்றம் இறைமைமிக்க நிறுவனமாக காணப்படும் அதே நேரம், ஸ்கொட்லாந்து, வேல்ஸ் மற்றும் வட அயர்லாந்து ஆகிய அதிகாரம் பரவலாக்கப்பட்ட நிர்வாக அலகுகள் (பிராந்தியங்கள்) மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ளன.
   (2) சுவிற்சர்லாந்தின் அரசியலமைப்பு மத்திய அரசாங்கம் மற்றும் கன்டன்களின் அதிகாரங்களை தெளிவாக வரையறை செய்யவில்லை.
   (3) இந்திய அரசியலமைப்பு ஒன்றிய (மத்திய) அரசாங்கத்தை விடவும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கியுள்ளது.
   (4) ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு மாநில அரசாங்கங்களின் அதிகாரங்களை மட்டுமே பட்டியலிட்டுள்ளது.
   (5) பிரான்சின் அரசாங்க முறைமை அரைகுறை சமஷ்டி முறைமைக்கு மிகச் சிறந்த உதாரணமாக கருதப்படுகின்றது. (......)

13. மோதல் தீர்வு என்பதன் மூலம் பொதுவாகக் கருதப்படுவது
   (1) துரிதமானதும் எளிமைமிக்கதுமான ஓர் செயன்முறை என்பதாகும்.
   (2) ஒரு குறுங்கால செயற்பாடு என்பதாகும்.
   (3) ஒரு நீண்டகால செயன்முறை என்பதாகும்.
   (4) அரசசார்பற்ற நிறுவனங்களால் மட்டும் மேற்கொள்ளப்படும் ஓர் நடவடிக்கை என்பதாகும்.
   (5) அரசு மாத்திரம் ஈடுபடும் ஒரு செயற்பாடு என்பதாகும். (......)

14. ஒற்றையாட்சி அரசொன்றில்
   (1) இறைமையதிகாரம் மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்குமிடையில் பகிரப்பட்டிருக்கும்.
   (2) சட்டத்துறை கட்டாயம் இருமன்றங்களைக் கொண்டு காணப்படும்.
   (3) அதிகார வேறாக்கம் ஓர் இன்றியமையாத பண்பாகக் காணப்படும்.
   (4) உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது அதிகாரங்களை மத்திய அரசாங்கத்திடமிருந்துப் பெற்றுக் கொள்கின்றன.
   (5) மத்திய அரசு தனது தற்துணிவின் பெயரில் சட்டங்களை இயற்றமுடியாது. (......)

15. பின்வரும் கூற்றுக்களுள் இறைமையின் பண்பினை விபரிப்பது எது?
   (1) அரசுகள் ஏனைய அரசுகளின் விவகாரங்களில் தலையிடுவதை அனுமதிக்கின்றது என்பதாகும்.
   (2) அனைத்து சமூக நிறுவனங்களும் அனுபவிக்கும் அதிகாரமாகும்.
   (3) அது அரசுகளுக்கு மட்டுமே உரித்தாகும் பிரத்தியேக அதிகாரமாகும்.
   (4) மக்கள் தொகையின் அளவுக்கு ஏற்ப வேறுபடுமொன்றாகும்.
   (5) அரசாங்கத்தின் ஓர் இன்றியமையாப் பண்பாகும். (......)

16. பின்வரும் சிந்தனையாளர்களுள் அரசு பற்றிய சமூக ஒப்பந்தக் கோட்பாட்டுடன் நெருக்கமாகத் தொடர்புபட்டவர் யார்?
   (1) கார்ல் மார்க்ஸ் (2) அடெம் ஸ்மித் (3) ஜோன் லொக்
   (4) எட்மன்ட் பேர்க் (5) ஜே. எஸ். மில் (......)

17. பின்வரும் கூற்றுக்களில் பொதுக் கொள்கை உருவாக்கச் செயன்முறையில் அரசியல் கட்சிகளின் வகிபாகத்தை விளக்குவது எது?
   (1) அவை கொள்கை அமுலாக்க செயன்முறையில் மட்டுமே ஈடுபடுகின்றன.
   (2) அவை கொள்கை மறுசீரமைப்புகளை ஆதரித்து பிரசாரம் செய்ய முற்படுவதில்லை.
   (3) அவை கொள்கை உருவாக்க செயன்முறையில் எப்போதும் பணியகவமைப்புடன் (பணிக்குழு) போட்டியிடுகின்றன.
   (4) அவை மக்கள் நலன்களை கொள்கை நிகழ்ச்சி நிரலுக்கு கொண்டு சேர்க்கின்றன.
   (5) அவை கொள்கை உருவாக்க செயன்முறையில் சமூக ரீதியில் புறக்கணிப்புக்குள்ளான மக்களின் நலன்களை உதாசீனம் செய்கின்றன. (......)

18. பின்வருவனவற்றுள் எது யாப்புறுவாத (அரசியலமைப்புவாதம்) எண்ணக்கருவை விபரிக்கின்றது?
   (1) அது சர்வாதிகார அரசாங்க முறைகளில் பரவலாக பின்பற்றப்படும் ஒன்றாகும்.
   (2) அது அதிகார வேறாக்க தத்துவத்தை நிராகரிக்கும் ஒன்றாகும்.
   (3) அது அரசியலமைப்பு வழிமுறைகளுக்கூடாக அரசாங்க அதிகாரத்தினை கட்டுப்படுத்துவதனை வலியுறுத்தும் எண்ணக்கருவாகும்.
   (4) அது தனிமனித சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் ஒன்றாகும்.
   (5) அது ஆட்சியாளர்கள் தமது விருப்பப்படி சட்டங்களை இயற்ற வழி செய்யும் ஒன்றாகும். (......)

PAST PAPERS WIKI

[பக். 4 ஐப் பார்க்க

Past Papers Wiki



**19.** பின்வருவனவற்றுள் சர்வதேச அரச சார்பு நிறுவனத்தை (IGOs) தெரிவு செய்க.
(1) சர்வதேச மன்னிப்புச் சபை
(2) சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்
(3) உலக வன ஜீவராசிகள் நிதியம்
(4) சர்வதேச நாணய நிதியம்
(5) மனித உரிமைகள் கண்காணிப்பகம் (......)

**20.** பின்வருவனவற்றுள் எது சர்வதேச முறைமையின் அராஜக நிலைக்கு நேரடியாக பங்களிப்புச் செய்கின்றது?
(1) அரசுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு
(2) அரசுகளிடையேயான பரஸ்பர தங்குநிலை
(3) அரசுகளிடையேயான மோதல் மற்றும் யுத்தம்
(4) சர்வதேச சட்டம் மற்றும் ஒழுக்கம்
(5) சர்வதேச நிறுவனங்கள் (......)

- **21** தொடக்கம் **25** வரையிலான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையினைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தினை அடைப்புக்குறிக்குள் உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

**21.** கோல்புறூக் சீர்திருத்தங்கள்
A - நாட்டில் ஒருமுகப்படுத்தப்பட்ட அரசாங்க முறைமையை ஸ்தாபித்தது.
B - அரசாங்கத்தின் எதேச்சதிகார தன்மையினை கட்டுப்படுத்தியது.
C - ஆங்கிலத்தை நாட்டின் நிர்வாக மொழியாக ஏற்றுக்கொண்டது.
D - இராஜகாரிய முறைமையை இல்லாதொழித்தது.
E - ஆளுநரின் தன்னிச்சையான ஆட்சியினை வலுப்படுத்தியது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**22.** டொனமூர் அரசியலமைப்பின் கீழான அமைச்சர்கள் சபை (அமைச்சரவை)
A - முழு அளவிலான வெஸ்ட்மின்ஸ்டர் பாணியிலான அமைச்சரவையாக காணப்படவில்லை.
B - பிரதம செயலாளரை தலைவராக கொண்டு செயற்பட்டது.
C - தேசாதிபதி அமைச்சர்கள் சபையின் ஒரு அங்கத்தவராக காணப்பட்டார்.
D - பிரதமரை ஒரு அங்கத்தவராக கொண்டிருக்கவில்லை.
E - பத்து அங்கத்தவர்களை கொண்டிருந்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**23.** சோல்பரி அரசியலமைப்பு (1947/1948)
A - தாராள ஜனநாயக தத்துவங்களை அடிப்படையாக கொண்ட அரசாங்க முறையை ஸ்தாபித்தது.
B - சிறுபான்மையோர் உரிமைகளைப் பாதுகாக்க விசேட ஏற்பாடுகளைக் கொண்டிருந்தது.
C - பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமையைத் தொடர்ந்தும் பேணியது.
D - 1972 வரை நடைமுறையில் இருந்தது.
E - செனட் என அழைக்கப்பட்ட அதிகாரமிக்க இரண்டாம் சபையினை ஸ்தாபித்தது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**24.** இலங்கையின் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு
A - அரசியலமைப்புக்குட்பட்ட முடியாட்சி அரசாங்கத்தை இல்லாதொழித்தது.
B - குடியரசு அரசாங்க முறையினை ஸ்தாபித்தது.
C - வெஸ்ட்மின்ஸ்டர் அரசாங்க முறையினை சில பண்புகளை தொடர்ந்தும் பேணியது.
D - இலங்கையை சுதந்திரம், இறைமை மற்றும் சுயாதீனமிக்க அரசாக மாற்றியது.
E - அதிகார வேறாக்கத் தத்துவத்தினை வலுப்படுத்தியது.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

**25.** 1978 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையின் அரசியல் முறைமையில் தொடர்ச்சியாக அவதானிக்கத்தக்க சில ஜனநாயகப் பண்புகள்
A - தேர்தல்களில் வாக்காளர்களின் பங்கேற்பு உயர்ந்த மட்டத்தில் காணப்படுதல்.
B - ஜனாதிபதியிடம் அரச அதிகாரம் குவிந்துக் காணப்படுதல்.
C - அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பு ரீதியாக உத்தரவாதம் செய்யப்பட்டிருத்தல்.
D - எப்போதும் காலத்திற்கு காலம் இடம்பெறும் தேர்தல்கள் ஊடாக அரசாங்கங்கள் மாற்றியமைக்கப்படுதல்.
E - துடிப்புமிக்க சிவில் சமூகமொன்று காணப்படல்.
(1) ABCD (2) ABCE (3) ABDE (4) ACDE (5) BCDE (......)

[பக். 5 ஐப் பார்க்க

● **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுகளுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் **இலக்கத்தினைத்** தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் உள்ள **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விவரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| **26.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஜனாதிபதித்துவ அரசாங்க முறையினை அறிமுகம் செய்தது. | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு அரைகுறை (கலப்பு) ஜனாதிபதித்துவ அரசாங்க முறையினை அறிமுகம் செய்தது. | (……) |
| **27.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 ஆவது திருத்தத்தின் படி மாகாண ஆளுநர்களை ஜனாதிபதி நியமிக்கின்றார். | மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதி விரும்பும் காலம் வரை பதவியில் நீடிக்க முடியும். | (……) |
| **28.** | இலங்கையில் நடைபெறும் தேர்தல்களில் பெரும் எண்ணிக்கையிலான அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன. | ஒவ்வொரு அரசியல் கட்சியும் நாடு பூராகவும் கணிசமானவளவு ஆதரவு தளத்தினைக் கொண்டுள்ளன. | (……) |
| **29.** | இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட மக்கள் தீர்ப்பை நேரடி ஜனநாயகத்தின் ஓர் முக்கிய கருவியாக கருத முடியும். | 1982 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் எந்தவொரு மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பும் இடம்பெறவில்லை. | (……) |
| **30.** | இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு வெளிவிவகார அமைச்சுப் பதவியினை பிரதமர் வகிக்க வேண்டும் என்ற ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது. | இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பு சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்காத அனைத்து சந்தர்ப்பங்களிலும் பிரதமர் சபாநாயகராக செயற்பட வேண்டும் என குறிப்பிடுகின்றது. | (……) |

[பக். 6 ஐப் பார்க்க

## பகுதி **B**

**31.** நவீன அரசுகள் சில அடிப்படை மூலக் கூறுகளைக் கொண்டு ஒழுங்கமைந்துள்ளன. அவற்றுள் **இரண்டினைக்** பெயரிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**32.** இறைமை அதிகாரம் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் விதத்தினை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க முறைகளுள் எவையேனும் **இரண்டினை** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**33.** நிறைவேற்று அதிகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் அரசாங்க முறைகள் எவையேனும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**34.** (1) அதிகாரம் ஒரு தனி நிறுவனத்தில் / தனி நபரிடம் குவிக்கப்படுவதனை தடுக்கும் அரசியல் எண்ணக்கருவினைக் குறிப்பிடுக

..........................................................................................................

(2) அரசியல் சமூகமொன்றில் சட்டத்தினை உருவாக்கவும் அதனை அமுல்படுத்தவும் அரசு கொண்டுள்ள உச்ச அதிகாரத்தினை விபரிக்கும் அரசியல் எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

..........................................................................................................

**35.** 'வரையறுக்கப்பட்ட அரசாங்கம்' என்ற தாராள ஜனநாயக எண்ணக்கருவின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த **இரண்டு** பிரதான அரசியல் சிந்தனையாளர்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**36.** (1) பாசிச இத்தாலியின் தலைவராக காணப்பட்டவர் யார்?

..........................................................................................................

(2) நாசிச ஜேர்மனியின் தலைவராகக் காணப்பட்டவர் யார்?

..........................................................................................................

**37.** இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழ் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கான அதிகாரங்கள் மூன்று வகையான பட்டியல்களின் கீழ் பரவலாக்கப்பட்டுள்ளன. அவற்றில் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

[பக். 7 ஐப் பார்க்க

**38.** (1) பொருளாதார சமத்துவத்தினை வலியுறுத்தும் (பரப்புரை செய்யும்) அரசியல் கருத்தியல் எது?

..........................................................................................................

(2) பால்நிலை சமத்துவத்தினை வலியுறுத்தும் (பரப்புரை செய்யும்) அரசியல் கருத்தியல் எது?

..........................................................................................................

**39.** அரசியலைக் கற்பதற்கான சமூகவியல் அணுகுமுறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த **இரண்டு** முன்னணி சிந்தனையாளர்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**40.** பிரித்தானிய பாராளுமன்றம் **இரண்டு** அவைகளைக் கொண்டமைந்துள்ளது. அவற்றின் பெயர்களை குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**41.** அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**42.** பொதுக்கொள்கை செயன்முறையின் ஏதேனும் **இரண்டு** கட்டங்களைக் குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**43.** பிராந்திய மட்டத்தில் சில அரசுகளுக்கிடையிலான நிறுவனங்கள் செயற்படுகின்றன. அவற்றில் ஏதேனும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**44.** இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் மீது குறிப்பிட்ட சில உள்நாட்டுக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றில் ஏதேனும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..........................................................................................................

(2) ..........................................................................................................

**45.** (1) நிலையான சமாதானம் என்ற எண்ணக்கருவினை முன்வைத்த அறிஞரின் பெயரினைக் குறிப்பிடுக.

..........................................................................................................

(2) மோதல் நிலைமாற்றம் என்ற எண்ணக்கருவினை முன்வைத்த அறிஞரின் பெயரினைக் குறிப்பிடுக.

..........................................................................................................

[பக். 8 ஐப் பார்க்க

**46.** டொனமூர் அரசியலமைப்பு (1931 - 1947) நடைமுறையிலிருந்த காலத்தில் பல பொது நலக் கொள்கைகளும் சீர்த்திருத்தங்களும் அறிமுகம் செய்யப்பட்டன. அவற்றில் ஏதேனும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**47.** சோல்பரி அரசியலமைப்பின் (1947/48) கீழ் ஸ்தாபிக்கப்பட்ட **இரண்டு** சுயாதீன ஆணைக்குழுக்கள் எவை?

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**48.** இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பின் (1972) கீழ் உள்வாங்கப்பட்ட அடிப்படை உரிமைகளுள் ஏதேனும் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

**49.** (1) இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பின் (1972) கீழ் அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாகக் காணப்பட்ட நிறுவனம் எது?

..............................................................................................................

(2) இலங்கையின் முதலாம் குடியரசு அரசியலமைப்பின் (1972) கீழ் அரசின் தலைவர் எவ் உத்தியோகப்பூர்வ பெயர் கொண்டு அழைக்கப்பட்டார்?

..............................................................................................................

**50.** (1) இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை (நியாயாக்கத்தினை) கொண்ட நீதிமன்றம் எது?

..............................................................................................................

(2) இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை (நியாயாக்கத்தினை) கொண்ட நீதிமன்றம் எது?

..............................................................................................................

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2026
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2026
General Certificate of Education (Adv. Level) Examination, 2026

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

**23 T II**

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

※ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

※ பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** அரசியல் விஞ்ஞான கற்கைக்கான பின்வரும் அணுகுமுறைகளை சுருக்கமாக விவரிக்குக.

(i) சமூகவியல் அணுகுமுறை

(ii) ஒப்பீட்டு அணுகுமுறை (10 × 2 = 20 புள்ளிகள்)

**2.** அரசுக்கும் அரசாங்கத்துக்குமிடையிலான வேறுபாட்டினை உதாரணங்களுடன் எடுத்துக்காட்டுக. (20 புள்ளிகள்)

**3.** பின்வரும் அரசியல் கருத்தியல்களுள் எவையேனும் **இரண்டின்** பிரதான பண்புகளை சுருக்கமாக ஆராய்க.

(i) பெண்ணியல்வாதம்

(ii) சமூக ஜனநாயகம்

(iii) பாசிசவாதம்

(10 × 2 = 20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** டொனமூர் அரசியலமைப்பின் கீழ் பின்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டினது** அதிகாரங்கள் மற்றும் பணிகளை சுருக்கமாக ஆராய்க.

(i) தேசாதிபதி

(ii) அரசாங்க உத்தியோகத்தர்கள்

(iii) அரசக் கழகம்

(iv) அமைச்சர்கள் சபை (அமைச்சரவை)

(10 × 2 = 20 புள்ளிகள்)

**5.** (i) 1947/48 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அறிமுகம் செய்யப்பட்ட அரசியலமைப்புசார் ஏற்பாடுகள் **ஐந்தினை** குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) 1947/48 ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அரசியலமைப்புசார் ஏற்பாடுகளின் தாக்கத்தினை மதிப்பீடு செய்க. (15 புள்ளிகள்)



Past Papers Wiki

PAST PAPERS WIKI

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**6.** இலங்கையின் 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் பிரதான பண்புகளை விளக்குக. (20 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்தின் அமைவுச்சேர்க்கை, அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்குக.

(ii) இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான தொடர்பினை ஆராய்க.

(10 × 2 = 20 புள்ளிகள்)

## பகுதி III

**8.** பின்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டினை** சுருக்கமாக ஆராய்க.

(i) பிரான்சின் ஒற்றையாட்சி அரசாங்க முறையின் பண்புகள்

(ii) இந்திய சமஷ்டி முறையின் பிரதானப் பண்புகள்

(iii) ஐக்கிய அமெரிக்காவின் மாநில அரசாங்கங்களின் அதிகாரங்கள்

(10 × 2 = 20 புள்ளிகள்)

**9.** இலங்கை சுதந்திரம் பெற்றது முதல், அதன் வெளிநாட்டுக் கொள்கையினை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்திய எவையேனும் **நான்கு** காரணிகளை விவரிக்குக. (20 புள்ளிகள்)

**10.** பின்வரும் தலைப்புகளுள் எவையேனும் **இரண்டுக்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 19 ஆவது திருத்தம்

(ii) பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் பிரதான பண்புகள்

(iii) சர்வதேச அரசியலில் அரசல்லாத செயற்பாட்டாளர்கள்

(iv) பாராளுமன்ற அரசாங்க முறையில் எதிர்க்கட்சியின் வகிபங்கு

(v) மோதல் தொடர்பான எளிய வகைப்படுத்தல்

(10 × 2 = 20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library